# CSR-INDIA-2020 AWARD TO TNPL

TNPL receives CSR-INDIA-2020 Award from GREENTECH FOUNDATION, New Delhi under the category of “Promotion of Education”.

GREENTECH FOUNDATION, New Delhi is a nonprofit organization which has invited applications for 7th CSR India Award from the companies, Organization and NGOs in recognition of outstanding for “7th Greentech CSR Award-2019”. TNPL has participated under the category of “Promotion of Education” for the CSR Award.

TNPL is executing numerous activities for better education to the children residing in the surrounding villages under CSR. TNPL has been providing free education to the downtrodden people from Onavakkalmedu village TNPL is organizing spoken English classes in the Govt. Schools, organizing evening coaching classes and Industrial visit to Govt. school students. Every year, TNPL is Sponsoring 5 students to undergo Diploma In Paper Technology. TNPL is providing infrastructure facilities viz. constructing Dining hall, noon meal centre, Additional class rooms, Toilets, Drinking water tanks and distributing Furnitures, Play material to the Govt. Schools and Creating Model schools, etc,.

For the above initiatives, TNPL has received **CSR-INDIA-2020** Award under the category of **“Promotion of Education”**. Due to Covid-19 pandemic situation, “Awards Presentation Programme”, was held virtually live on 1st October 2020 and our Managing Director has received the Trophy & Certificate.



# இந்து தமிழ் திசை (07.10.2020)

# டிஎன்பிஎல் சமுதாய நலப்பணி திட்டத்துக்கு 'கிரீன்டெக்' விருது

■ கரூர்

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமுதாய நலப்பணி (சிஎஸ்ஆர்) திட்டத்துக்கு கிரீன்டெக் விருது வழங்கப்பட்டுள்ளது.

டெல்லி கிரீன்டெக் பவுண்டேஷன் ஆண்டுதோறும் பணியிடம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சிறந்த சமூக நலப்பணித் திட்டம் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் நிறுவனங்களை தேர்வு செய்து விருதுகள் வழங்கி வருகிறது. 2019-ம் ஆண்டுக்கான சமூக நலப்பணித் திட்டத்தின் கீழ் விருதுக்கு விண்ணப்பங்கள் கேட்கப்பட்டிருந்தன. கல்வி மேம்பாடு (ப்ரமோஷன் ஆஃப் எஜுகேஷன்) என்ற பிரிவின் கீழ் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் விண்ணப்பித்து அதற்கான ஆவணங்களை சமர்ப்பித்து இருந்தது.

காகித ஆலை பேரூராட்சிக் குட்பட்ட ஓனவாக்கல்மேட்டைச் சேர்ந்த நலிவுற்ற சமுதாயத்தைச் சார்ந்த குழந்தைகளை தேர்ந் தெடுத்து டிஎன்பிஎல் பள்ளியில் இலவச கல்வி வழங்குதல், ஆண்டுதோறும் 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 5 மாணவர்களை மதிப்பெண் அடிப்படையில் தேர்வு செய்து சேஷசாயி இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியில் காகிதப் பிரிவில் கட்டணமில்லா தொழிற் பட்டயப்படிப்பு பயில உதவுதல்.

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு ஆங்கிலம் பேச்சுத்திறன் வளர்ப்பு பயிற்சி வகுப்புகளை நடத்துதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொண்டு வருவதை கிரீன்டெக் பவுண்டேஷன் மூலம் அமைக்கப்பட்ட, ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான நடுவர் குழு பரிசீலித்து தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின், சமுதாய நலப்பணித் திட்டத்தை, கல்வி மேம்பாடு (ப்ரமோஷன் ஆஃப் எஜுகேஷன்) என்ற பிரிவில் தேர்வு செய்து விருது வழங்கியுள்ளது.




▶▶ தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணி திட்டத்துக்காக வழங்கப்பட்ட கிரீன்டெக் விருதுடன் நிறுவன மேலாண்மை இயக்குநர் எஸ்.சிவசண்முகராஜா.

விருது வழங்கும் நிகழ்வானது கோவிட்- 19 காரணமாக அக்.1-ம் தேதி காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது. காகித நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எஸ்.சிவசண்முகராஜா விருது மற்றும் சான்றிதழை பெற்றுக்கொண்டார்.